மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மேலூரில், 3,500 மாணவிகள் கல்வி பயின்று வருவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தவுடன், 44, ஆதி திராவிடர் நல விடுதிகளுக்கு கட்டடங்கள் கட்டுவதற்காக ரூ.35.04 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, இப்போது அந்தப் பணிகள் நல்லமுறையில் நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைபோன்று இடம் இருப்பின், கட்டமைப்பு வசதிகள் இருப்பின், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையினைப் பெற்று மேலூரில் ஒரு மாணவியர் விடுதி கட்டுவதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 102, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

102—

சொந்தக் கட்டடம்

*__13520__—**திரு. சு. ரவி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொழிலாளர்கள் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் இன்றைய நிலவரப்படி 10,256 காப்பீட்டாளர்கள்

2013 மார்ச் 28]

பயன்பெற்று வருகின்றனர். நாள் ஒன்றுக்கு சராசரியாக 155 நோயாளிகள் மருத்துவ சிகிச்சை பெற்று வருகிறார்கள். காப்பீட்டாளர்கள் மற்றும் சிகிச்சை பெறுவோர்களுடைய எண்ணிக்கை அதிகரிக்கும்பட்சத்தில் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைப் பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்: காப்பீட்டாளர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் தினசரி வருகை எண்ணிக்கை 250–க்கு மேற்படும்போது, மேற்கண்ட மருந்தகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட உரிய இடத்தினைத் தெரிவு செய்து கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு புது டெல்லியிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகத்திற்கு அனுப்பப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: இந்திய திருநாட்டில், தாய்த் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக மாற்றிட உண்ணாமல் உழைத்து, உறங்காமல் விழித்து, 'அரசைத் தேடி மக்கள்' என்ற நிலையை மாற்றி 'மக்களைத் தேடி அரசு' என்று அற்புதமான 'அம்மா திட்டம்' ஒன்றைக் கொண்டுவந்து, (மேசையைத் தட்டும் ஒலி) அன்பின் உறைவிடமாய், அறிவின் இருப்பிடமாய், அழகின் அமைவிடமாய், அஞ்சாமையின் வாழ்விடமாய், ஆற்றலின் ஊற்றாய், துணிச்சலின் பிறப்பிடமாய், போர்க் குணத்தின் புகலிடமாய், தமிழக மக்களின் ஒளிவிளக்காய், தொழிலாளர் தோழர்களின் விடிவெள்ளியாய் திகழ்ந்து வரும் நாளைய பாரதப் பிரதமர், நான் வணங்கும் தெய்வம், தமிழ்நாடு முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

எனது தொகுதியிலே சுமார் 30 வருடங்களாக வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகின்ற தொழிலாளர் நல ஈட்டுறுதி

மருந்தகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தருவதாக நல்ல பதிலை வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய அரக்கோணம் தொகுதியிலுள்ள M.R.F., Ultra Tech., Ramco போன்ற பெரிய தனியார் தொழிற்சாலைகளிலும், பல சிறிய தொழிற்சாலைகளிலும் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சுமார் 55,000 பேர், அந்தத் தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகத்தை நம்பியுள்ளார்கள். மாதந்தோறும் 5,000–க்கும் மேற்பட்டவர்களும், தினந்தோறும் 200–க்கும் மேற்பட்டவர்களும் அந்த மருந்தகத்திற்குச் சென்று சிகிச்சை பெற்று வருகின்றார்கள். அங்கே, உள்நோயாளியாக இருந்து சிகிச்சை பெற முடியவில்லை. எனவே, அந்த மருந்தகத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி, நீண்ட நாட்களாக காலியாக உள்ள முதன்மை தலைமை மருத்துவர், உதவியாளர், மருத்துவப் பணியாளர், லேப் டெக்னிஷியன் ஆகிய பணியிடங்களை நிரப்பித் தருமாறும், ஆய்வக உபகரணங்களை வழங்கிடுமாறும் மாண்புமிகு அம்மா அவர்கள் பொற்பாதம் பணிந்து வணங்கி, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மருந்தகத்தை மருத்துவமனையாக மாற்றித் தரவேண்டுமென்று கூறியிருக்கின்றார்கள். அங்கே 25,000 தொழிலாளர்களுக்கு மேல் இருக்கின்ற பட்சத்தில்தான், நாம் அங்கே மருத்துவமனை கட்டுவது உசிதப்படும். அதுமட்டுமல்லாமல், இப்பொழுது அங்கே 155 பயனாளிகள்தான் புறநோயாளிகளாக வந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதைத் தரம் உயர்த்த முடியாது என்பதை இந்த நேரத்தில் உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பணியிடங்கள் காலியாக இருப்பதைப் பற்றி சொன்னார்கள். 11 பணியிடங்கள் அங்கே ஒப்பளிப்பு செய்யப்பட்டிருக்கின்றன. அதில், 7 பணியிடங்கள் நிரப்பப்பட்டு, 4 இடங்கள் காலிப் பணியிடங்களாக

2013 மார்ச் 28]

இருந்தாலும், மேற்கண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்தில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு கருணையுள்ளத்தோடு பரிசீலித்து, அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் மருத்துவர்களை நியமிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், தமிழ்நாட்டில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களில் மொத்தமுள்ள 691 பணியிடங்களில், 557 பணியிடங்கள் நிரப்பப்பட்டுவிட்டன. மீதமுள்ள 134 காலிப் பணியிடங்களை நிரப்ப (மேசையைத் தட்டும் ஒலி) நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலிப் பணியிடங்களை நிரப்பித் தருகிறேன் என்று சொல்லிய, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 103, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

103—

மாணவர் விடுதி

***18384—திரு. அ. பாப்பா சுந்தரம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், இனுங்கூர் கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் மாணவர் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?